பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 14 | செவ்வாய்க்கிழமை | 31.10.2023 | அதிர்வு 91

## பட்ஜெட் குறித்து ‘மொட்டு’ இன்னும் முடிவு இல்லை

### ரஞ்சித் பண்டார எம்.பி. தெரிவிப்பு

“வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி இன்னும் முடிவு எதையும் எடுக்கவில்லை. இந்த விடயம் தொடர்பில் கட்சியாகவே இறுதியான – உறுதியான முடிவு எடுக்கப்படும்” 06

# அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு உறுதி

## தனியார் துறையினருக்கும் கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை



2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்கள் அனைவருக்கும் சம்பள உயர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார். 06

## சரத் பொன்சேகாவை நீக்கும் முடிவு இல்லை

### சஜித் கட்சி அறிவிப்பு



“நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியில் இருந்து நீக்குவது குறித்தோ அல்லது அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை 06

## தேர்தலை எதிர்கொள்ள சு.கவினர் புதிய வியூகம்

### விசேட குழுவை அமைத்த மைத்திரி



அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில் பல்வேறு கட்சிகளும் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்ளத் தயாராகி வருகின்றன.

இவ்வாறானதொரு 08

### வவுனியாவில் திருடப்பட்ட

## 30 லட்சம் ரூபா பெறுமதியான ஐம்பொன் சிலை யாழில் மீட்பு



- எஸ்.நிதர்ஷன் -

வவுனியாவில் திருடப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட 30 லட்சம் ரூபா பெறுமதியானது என மதிப்பிடப்பட்ட ஐம்பொன் சிலை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் வைத்து இந்தச் சிலை கைப்பற்றப்பட்டுள்ளது. 08




யாழ் பல்கலைக் கழக மாணவர் மட்டத்தில் நேற்று மாலை – ஏன் முன்னிரவு வரை – ஒரு விடயம் குழப்பமாக இருந்ததாகச் செய்தியாளர்கள் தகவல் தந்தனர்.

விடயம் ஒன்றுமில்லை, சமூக ஊடகத்தில் வந்த ஒரு கருத்துப் பகிர்வால் ஏற்பட்ட சர்ச்சைதான்.

மனித உரிமைகள், மகளிர் உரிமைகள், பொது நீதி, அரசியல் – சமூக மாற்றங்களுக்கான போராட்டங்கள் போன்ற 06



# உலக வங்கியின் விசேட பிரதிநிதிகள் கோப்பாய் வைத்தியசாலைக்கு விஜயம்



உலக வங்கியின் விசேட பிரதிநிதிகள் யாழ்.கோப்பாய் வைத்தியசாலைக்கு நேற்றுக் கண்காணிப்பு விஜயம் மேற் கொண்டிருந்தனர்.

உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் செயற்படுத்தப்படும் அடிப்படை சுகா தார சேவைகளை வலுப்படுத்தும் செயற் றிட்டத்தை கண்காணிப்பதற்காக இந்த விஜயம் இடம்பெற்றிருந்தது.

உலக வங்கியின் நடவடிக்கை முகாமைத்துவ பணிப்பாளர் Anna Bjerde உள்ளிட்ட பிரதிநிதிகள் சிலர் நேற்று முன்தினம் நாட்டிற்கு வருகை தந்திருந்தனர்.

அவர்கள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவை நேற்று முன் தினம் சந்தித்திருந்தனர். இராஜாங்க னையில் அமைந்துள்ள விவசாய நவீன மயப்படுத்தல் செயற்றிட்டத்தின் தற்போ தைய நிலைமை தொடர்பில் ஆராய்வ தற்காக நேற்று முன்தினம் பிற்ப- கல் கள விஜயம் மேற்கொண்டிருந்த னர்.

இந்த விஜயத்தில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க உள் ளிட்டவர்களும் இணைந்திருந்தனர்.

இதேவேளை, ஜனாதிபதியுடன் இன்று இடம்பெறவுள்ள பலதரப்பு நிதி வசதிகளை வழங்கும் நிறுவனங் களுக்கு இடையிலான வட்டமேசை கலந்துரையாடலிலும் உலக வங்கி யின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ள னர்.

இலங்கையில் உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் நடைமுறைப்ப டுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் உலக வங்கியின் பிரதிநிதி கள் ஆய்வு செய்யவுள்ளனர்.

# மலையக ரயில் சேவை பாதிப்பு



ரயில் ஒன்று தடம் புரண்டுள்ளமையினால் மலையக மார்க்கம் ஊடான ரயில் சேவையில் தாமதம் ஏற்பட்டுள்ள தாக இலங்கை ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கினிகம – ஹீலோயா ரயில் நிலையங்களுக்கு இடை யிலேயே இந்த ரயில் தடம் புரண்டுள்ளது.

எவ்வாறெனினும், தடம் புரண்ட ரயிலைத் தண்டவாளத்தில் நிமிர்த்தி வைப்பதற்கான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன என ரயில்வே கட்டுப்பாட்டு மையம் தெரிவித் துள்ளது.

# பொது சுகாதாரப் பரிசோதகர் சங்கம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில்

போக்குவரத்து கொடுப்பனவு அதிகரிப்பு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இரண்டு நாள் பணிப்புறக் கணிப்பு போராட்டத்தில் இலங்கை பொது சுகாதாரப் பரிசோத கர்கள் சங்கம் ஈடுபட்டுள்ளது.

பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் கீழ் உள்ள அனைத்து அதிகாரிகளும் நேற்றும் இன்றும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என சங்கத்தின் செய லாளர் உபுல் றோஹண கூறியுள்ளார்.

பொது சுகாதாரப் பரிசோதகர்கள் தொழிற்சங்க நடவடிக் கையில் ஈடுபட்டாலும் அத்தியாவசிய சேவைகளுக்கு இடையூறு ஏற்படாது எனவும் உபுல் றோஹண தெரிவித் துள்ளார்.

அரசாங்கம் உடனடியாகத் தமது கோரிக்கைகளை நிறை வேற்றாவிடின் எதிர்காலத்தில் பாரிய போராட்டங்களை நடத் துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர் எனவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன், பலமுறை அரசாங்கத்துடன், கலந்துரையா டல்கள் நடத்தியும் இதுவரை தீர்வுகள் வழங்கப்படவில்லை.



இம்முறை வரவு – செலவுத்திட்டத்தின் ஊடாகவேனும் தமக் கான போக்குவரத்து கொடுப்பனவு உட்பட ஏனைய கொடுப் பனவுகளை அதிகரிப்பதற்கான வழிவகைகள் செய்யப்பட வேண்டும் எனவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இன்றைய தினமும் இந்தப் போராட்டம் தொடரும் எனவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளனது.

CENTRAL PARK
JA-ELA

# CENTRAL PARK JA-ELA

## 15 ACRES LARGEST

GATED DEVELOPMENT PROJECT IN SRI LANKA

## OVER 40+ AMENITIES



## COMFORT ASSURED, SPACIOUS LAYOUTS & PREMIUM FACILITIES

KELSEY HOUSE - 3 BHK HOUSES
KELSEY VILLA - 3/4 BHK HOUSES
FAMILY VILLA - PRIVATE APARTMENTS
HARMONY PARK - HOUSING COMPLEX



24/2, Court Road, Weligampitiya, Ja Ela

Blue Ocean™ GROUP OF COMPANIES
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

3500+ UNITS
235+ PROJECTS
20+ CITIES

KELSEY HOMES
40 Years Housing Excellence

## Discover the Locations that Embraces the Ultimate Luxurious Living

+94 777 546 546 +94 770 774 774

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka. www.blueocean.lk www.kelsey.lk

# தெதுறு ஓயா நீர்த்தேக்கத்தை அண்டிய பகுதிகளில் வெள்ள அபாய எச்சரிக்கை



தெதுறு ஓயா நீர்த்தேக்கப் பகுதியில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தெதுறு ஓயாவிலிருந்து அதிகளவு நீர் வெளியேறி வருவதால் அந்தப் பகுதியை அண்மித்துள்ள இடங்களில் வெள்ளம் ஏற்பட வாய்ப்புள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி வாரியபொல, நிக்கவெரட்டிய, மஹவ, பிங்கிரிய, பல்லம மற்றும் சிலாபம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள தாழ்வான பகுதிகளில் சிறிய வெள்ள நிலைமை ஏற்படக்கூடுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மழையுடனான வானிலை காரணமாக ஆறு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பதுளை, களுத்துறை, இரத்தினபுரி, காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் 75 மில்லி மீற்றரிலும் அதிக மழை பெய்யக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் காற்று மற்றும் மின்னல் தாக்கங்களில் ஏற்படும் ஆபத்துகளை தவிர்ப்பதற்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

# பாதாள உலகக் குழுக்களைக் கட்டுப்படுத்த 6 மாதகாலத் திட்டத்தில் பொலிஸார் தீவிரம்

இலங்கையில் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த ஆறு மாதகால விசேட வேலைத்திட்டமொன்றை பொலிஸார் முன்னெடுக்க உள்ளனர் என மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் ஊடாக ஆறு மாதங்களுக்குள் இலங்கையில் குற்றச் செயல்களை முற்றாகக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அண்மைக் காலத்தில் பதிவாகியிருந்த குற்றச்செயல்களில் பெரும்பாலானவை வெளிநாடுகளில் வாழும் போதைப்பொருள் கடத்தல்காரர்களால் திட்டமிடப்பட்டவையாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன், இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

“குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பல சந்தேகநபர்கள் தற்போது பொலிஸ் காவலில் உள்ளனர்.

அண்மையக் காலத்தில் தெற்கில் பதிவாகிய திட்டமிடப்பட்ட குற்றங்கள் வெளிநாடுகளில் வாழும் போதைப்பொருள் கடத்தல்காரர்களால் திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டவையாகும்.

மூன்று முக்கிய போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தற்போது பொலிஸாரின் கட்டுப்பாட்டில் உள்ளனர். அவர்கள் வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டு மீண்டும் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டவர்களாவர்.

முறையான வேலைத்திட்டத்தின் ஊடாக எதிர்வரும் ஆறு மாத காலப்பகுதிக்குள் இந்த ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும், பாதாள உலகக் குழுக்களில் செயற்பாடுகளை முற்றாக ஒழிப்பதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

உங்கள் பகுதிகளில் தொழிலதிபர்களை மிரட்டி பணம் பறிப்பவர்கள் அல்லது திட்டமிட்டு குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பிலான தகவல்களை பொலிஸாரிடம் வழங்குவாறு வேண்டுகோள் விடுக்கிறேன்.” – என்றார்.



# யாழ்.வைத்தியசாலையில் ஐந்து நாள்களில் ஆயிரம் பேருக்குக் கண்புரை சத்திரசிகிச்சை






யாழ். போதனா வைத்தியசாலையில் ஆயிரம் பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை நேற்று முதல் தொடர்ச்சியாக ஐந்து நாள்கள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று மாலை வடக்கு மாகாண ஆளுநரின் பங்கு பற்றுதலுடன் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் இடம் பெற்றது

"அசிஸ்ட் ஆர் ஆர் பிரித்தானியா அன் இலங்கை" நிறுவனத்தின் ஏற்பாட்டில் அலாக்கா மற்றும் ஆனந்தா பவுண்டேஷனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனர்வாழ்வும் புதுவாழ்வும் நிறுவனத்தின் அனுசரணையில் மேற்கொள்ளப்படுகிறது.

உலக பார்வை தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம், இரத்தினபுரி வைத்தியசாலைகளின் நல்லுறவினை மேம்படுத்தும் முகமாக இம்மாதம் 30 ஆம் திகதி (நேற்று) தொடக்கம் மூன்றாம் திகதி வரை யாழ்.போதனா வைத்தியசாலை கண் சிகிச்சை வைத்திய நிபுணர் மலரவனின் நெறிப்படுத்தலில் கண் சிகிச்சை பிரிவில் ஆயிரம் பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கான செயற் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

இந்தக் கண்புரை சத்திர சிகிச்சையில் யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இருந்து ஐம்பதுக்கும் மேற்பட்டோருக்கும் மற்றும் அனுராதாபுரம் மதவாச்சி, பதவியா பகுதிகளில் இருந்து 170க்கும் மேற்பட்டோருக்கு நேற்றைய தினம் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது

இதே போன்று எதிர்வரும் நாள்களிலும் இந்த சத்திர சிகிச்சை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு ஆயிரம் பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நோயாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது அரச வைத்தியசாலைகளின் முக்கிய பொறுப்பு!

## சுட்டிக்காட்டுகின்றார் வடக்கு ஆளுநர்



அரச வைத்தியசாலைகளில் நோயாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எச்.எம். சார்ல்ஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் நேற்றையதினம் ஆரம்பித்து வைக்கப்பட்ட இலவச கண் புரை சத்திர சிகிச்சை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதுவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வைத்திய சாலையின் கண் சிகிச்சை பிரிவுக்கு வருகை தந்த போது சில விடயங்களை அவதானிக்க கூடியதாக இருந்தது.

குறிப்பாக அரச வைத்திய சாலைகள் தூய்மையாக காணப்படாத நிலைமையே காணப்படும். ஆனால் இன்று அதை உணரவில்லை. இது ஒரு தனியார் வைத்தியசாலை போல காட்சி அளிக்கின்றது.

இங்கே அனைத்து விடயங்களும் தனியார் வைத்தியசாலை போல இயங்குகின்ற நிலைமைதான் காணப்படுகின்றது. இதனை இங்கு பார்க்கும் போது எனக்கு வியப்பாக இருந்தது.

எனவே இதனை செயல்படுத்துகின்ற யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பார் மற்றும் கண் சிகிச்சைக்கு பொறுப்பான வைத்திய நிபுணர் மலரவன் ஆகியோருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதேபோன்றே வைத்திய சாலையின் அனைத்து சேவைகளும் உரிய முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும். மேலும் அரச வைத்தியசாலைகளுக்கு வருகின்ற நோயாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தப்பட வேண்டும். – எனவும் கேட்டுக் கொண்டார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வற்றிற்காகவும், ஆட்சியாளர்கள் மற்றும் பொலிஸாரின் அடக்குமுறை போன்றவற்றுக்கு எதிராகவும், ஆங்கிலத்திலும் தமிழிலும் கனதியாகக் குரல் எழுப்பி வரும் மிக இள வயது சமூகச் செயற்பாட்டாளர் தமிழ் சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கம்.

விடுதலைப் புலிகள் ஒரு பாஸிச அமைப்பு என்று வெளிப்படுத்தும் கருத்தியல் நிலைப்பாட்டை தமது காணொலி ஒன்றில் அவர் வெளிப்படையாக கூற, இப்போது படு சிக்கலில் மாட்டி இருக்கின்றார். சமூக ஊடகங்களில் – குறிப்பாக புலம்பெயர் தரப்புகளிடமிருந்து – பெரும் எதிர்ப்பையும் மோசமான கருத்துப் பகிர்வுகளையும் சம்பாதித்துத் தேடிக் கொண்டிருக்கின்றார்.

சமகாலசட்ட விடயங்கள் குறித்துகையாளும் அமைப்பின் நிகழ்வு ஒன்றை யாழ்ப்பாணப் பல்கலைகத்தின் சட்டத்துறை இன்று பிற்பகல் 2.30 மணி முதல் யாழ் பல்கலைக்கழகக் கலைப்பீட கலந்துரையாடல் மண்டபத்தில் ஏற்பாடு செய்திருக்கின்றது. 'நெருக்கடி காலத்தில் நீதித் துறைச் சுதந்திரம்' என்ற தலைப்பிலான இந்த நிகழ்வில் விருந்தினர் உரை நிகழ்த்த சட்டத்தரணி சுவஸ்திகா அருளிலிங்கம் அழைக்கப்பட்டிருக்கின்றார். சட்டத்துறை விரிவுரையாளர் சுஜாதா சமரதிவகர இணைப்பாளராக நிகழ்வை ஒழுங்குபடுத்துகின்றார்.

புலிகளைப் பாஸிச அமைப்பு என்று பகிரங்க வெளியில் கருத்துத் தெரிவித்தமைக்கு எதிர்ப்புக் காட்ட வேண்டும் என்ற சிந்தனை மாணவர் தரப்பில் ஓடுவதாகத் தெரிகின்றது.

அவர் இன்று பல்கலைக்கழகத்துக்கு வரும்போது வாசலில் எதிர்ப்பைக் காட்டுவதா அல்லது அந்தக் கருத்துப் பகிர்வு நிகழ்வை அல்லது இன்றைய வகுப்புகளை பகிஷ்கரிக்க சட்ட மாணவர்களைக் கோருவதா என்ற வாதப் பிரதிவாதங்கள் நேற்று முன்னிரவு வரை தொடர்ந்தன என்று எமது செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

கருத்தைக் கருத்தால் மோதுவதுதான் விவேகம். பொருத்தமானதும் கூட.

\+ + +

இந்திய வம்சாவளித் தமிழர்கள் இலங்கைக்கு வருகை தந்தமையின் 200ஆவது ஆண்டை ஒட்டி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி நடத்தும் நிகழ்வு நாளை மறுதினம் கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெறுகின்றமை குறித்தும், அதில் பங்குபற்ற இந்தியப் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருக்கின்றமை குறித்தும் நேற்று இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன்.

மலையக மக்களுக்காகப் போராடும் மற்றொரு கட்டமைப்பு மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி. இன்றைய நிலையில் மலையகத் தமிழர் தரப்பில் அதிக எம்.பிக்களைக் கொண்ட பிரதான கட்சியும் அதுதான்.

ஆனால் அந்தக் கூட்டணியின் தலைவர்களுக்கு மேற்படி நிகழ்வுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்று கூறப்படுகிறது.

கொழும்பில் நிகழ்வு நடக்கின்றமையால் கொழும்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் எம்.பி. என்ற முறையிலாவது மனோ கணேசனுக்கு அழைப்புக் கிடைத்ததா என்று 'செக்' செய்தேன். இல்லை என்றுதான் பதில் வந்தது.

'மலையகம் – 200' தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகள் இதுவரை நடந்துள்ளன. அவற்றுள் ஒரே ஒரு நடைபவனி மட்டுமே தமிழ் முற்போக்குக் கூட்டணியால் நடத்தப்பட்டது.

மற்றைய பொதுநிகழ்வுகள் பலவும் மலையக சிவில் அமைப்புகளினால் முன்னெடுக்கப்பட்டன. அவை எல்லாவற்றுக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணி உட்பட அனைத்து மலையகக் கட்சிகள், தரப்புகளுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டன.

எல்லா நிகழ்வுகளிலும் தமிழ் முற்போக்குக் கூட்டணி தவறாமல் பங்குபற்றியது. இ.தொ.கா. மட்டும் மிஸ்ஸிங்.

இப்போது இ.தொ.கா. தனது நிகழ்வை நடத்துகின்றது – மலையகத் தமிழ் மக்களின் மற்றொரு பிரதான கட்சியான தமிழ் முற்போக்குக் கூட்டணியை அழைக்காமல்.

இதைப் பார்க்கும் போது வேறு ஒன்றுதான் என் நினைவுக்கு வந்தது.

அது – நம் மத்தியில் இருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பற்றிய எண்ணம்தான்.

'நாங்கள் மட்டும்தான் 24 கரட் சொக்கத் தங்கம், மற்றைய கட்சிகள் எல்லாம் வெறும் செம்புக் கலவை.' என்று மற்றைய தமிழ்த் தேசியக் கட்சிகளை தீட்டு, துடக்கு, குற்றம் எனக் கூறி, அவற்றை முட்டாமல் – அவற்றுடன் சேர்ந்து இயங்காமல் – தள்ளி நிற்கும் ஒவ்வாமை (அலர்ஜி) நோய், வடக்கு – கிழக்கில் மட்டுமல்ல, மலையகம் வரையும் கூடப் பீடித்து நிற்கின்றது போலும்.

என்ன, இங்கு பேரன். அங்கு பூட்டன். அவ்வளவுதான் வித்தியாசம்....!

## அரச ஊழியர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன், தனியார் துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்படவுள்ளது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வரவு – செலவுத் திட்டத்தில் 20 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரி அரச ஊழியர்கள் நேற்று நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம் செய்த நிலையில் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

## பட்ஜெட் குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

"ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் வாக்குக் கேட்டு நாடாளுமன்றம் தெரிவாகி, பின்னர் சுயாதீனமானவர்களே கட்சி மீது கல்லெறிகின்றனர். இது பற்றி நாம் பதற்றம் அடையவில்லை. அந்தக் கற்களை வைத்து பாதை அமைத்து பயணிப்போம். எமது பயணம் மெதுவானதாக இருக்கலாம். ஆனால், இலக்கு நோக்கியது. தற்போது கல்லெறிபவர்கள் அப்போது பார்வையாளர்களாக மாறுவார்கள்.

அவர்களுக்குப் பெரிய சவால் அல்ல, சிறியதொரு சவாலை விடுக்கின்றேன், முடிந்தால் அடுத்துவரும் ஏதேனும் ஒரு தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெற்று காட்டுங்கள்." – என்றார்.

## சரத் பொன்சேகாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எடுப்பது குறித்தோ கட்சிக்குள் எந்தக் கலந்துரையாடலும் இடம்பெறவில்லை."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் சரத் பொன்சேகா தொடர்பில் வெளியான செய்திகள் தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சரத் பொன்சேகா ஒருபோதும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக விண்ணப்பிக்கவில்லை என்றும், கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் எனச் செயற்குழு தீர்மானித்துள்ளது என்றும், அந்தத் தீர்மானத்தில் மாற்றம் இல்லை என்றும் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. மேலும் கூறினார்.



**நமது கருத்து**
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தொடரும் ஜனநாயக விரோதம்

நாட்டில் சட்டம் - ஒழுங்கை காப்பதில் பிரதான பங்கு பொலிஸாருடையது.

அந்தப் பொலிஸ் துறைக்குத் தலைவர் யார் என்று சர்ச்சை பெரும் குழப்பமாக நீடிக்கிறது.

இந்தச் சீத்துவதில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைப் புரியும் பாதாள உலகக் குழுக்களை அடுத்த ஆறு மாதங்களில் அடக்குவோம் என்று பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவர் சூளுரைத்திருக்கின்றார்.

நாட்டில் சட்டம் - ஒழுங்கைப் பாதுகாப்பதற்கு பொறுப்பான பொலிஸ்மா அதிபர் - பொலிஸ் துறைஎன்றகப்பலின்தலைமைமாலுமிஅல்லதுமீகாமன் - யார் என்ற சர்ச்சையை இழுபட விட்டிருக்கின்றார் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

பதவியில் இருக்கும் பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் ஏழு மாதங்களுக்கு முன்னரே முடிந்து விட்டது. அவர் ஓய்வு பெற்றுச் செல்ல வேண்டியவர்.

அப்படி அவர் ஓய்வு பெற்று சென்ற பின், அவரின் பதவிக்காலத்தை முதல் மூன்று மாதங்களுக்கு நீடித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அவரது முடிவை - பரிந்துரையை - அரசமைப்புக் கவுன்ஸில் அங்கீகரிக்க வேண்டும். அது சட்டக் கடப்பாடாகும்.

அதன்படி, அவரது முதல் மூன்று மாத கால பதவி நீடிப்பு சிபாரிசை சபாநாயகர் தலைமையிலான அரசமைப்புக் கவுன்ஸில் கூடி அங்கீகரித்தது.

அந்த மூன்று மாதம் முடிய, அதே பொலிஸ்மா அதிபருக்கு இரண்டாவது மூன்று மாத கால பதவி நீடிப்புக்குப் பரிந்துரைத்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அதையும் அரசமைப்புக் கவுன்ஸில் அங்கீகரித்தது. எனினும் ஒரு நிபந்தனையுடன். இதே அதிகாரிக்கு மூன்றாவது பதவி நீடிப்புக்கு கவுன்ஸில் அங்கீகாரம் தராது என்ற குறிப்புடன்.

அந்த இரண்டாவது பதவி நீடிப்பு முடிந்த பின்னர் திடீரென அதே பொலிஸ்மா அதிபருக்கு தமது செயலாளர் மூலம் மேலும் மூன்று வார கால பதவி நீடிப்பு வழங்கும் கடிதத்தை வழங்கினார் ஜனாதிபதி ரணில் - தம்பாட்டில்.

இது குறித்து ஒரு தகவலுக்குத் தன்னும் அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு அவர் அறிவித்தல் கூடத் தரவில்லை.

அந்த மூன்றாவது நீடிப்பும் இன்றுடன் முடிவடைகின்றது.

பொலிஸ்மா அதிபர் நியமனத்துக்கு புதிய எவரினதும் பெயரையும் அரசமைப்பு கவுன்ஸிலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கினார் எனத் தகவல் இல்லை.

போகின்ற போக்கைப் பார்த்தால் வேறு எவரையும் இப்பதவிக்கு நியமிக்காமல், இருப்பவருக்கு நான்காவது தடவையாக பதவி நீடிப்பு - மீண்டும் மூன்று வாரங்களுக்கு - அதுவும் தம்பாட்டில் - அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு அறிவிக்காமல் - வழங்குவார் ஜனாதிபதி ரணில் என்றே தோன்றுகின்றது. இப்படி பொலிஸ்மா அதிபர் நியமனம் என்ற முக்கிய விடயத்தில், அரசமைப்புக் கவுன்ஸிலின் செயற்பாட்டை செல்லாததாக்கியமை மூலம் தாம் ஒரு ஜனநாயக விரோதப் பண்புகள் கொண்டவர், சர்வாதிகாரி, எதேச்சாதிகார ஆட்சி முறையை பின்பற்றுபவர் என்பதை இன்னொரு தடவை நிரூபிக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க. அவ்வளவு தான்!

# கொழும்பு - லாகூருக்கான விமான சேவை அதிகரிப்பு




கொழும்பு மற்றும் பாகிஸ்தானின் லாகூருக்கு இடையே வாராந்த விமான சேவைகளின் எண்ணிக்கையை ஸ்ரீலங்கன் விமான சேவை நான்காக அதிகரித்துள்ளது.

இதன்படி, இன்று முதல் வாராந்தம் செவ்வாய், வியாழன், சனி மற்றும் ஞாயிறு ஆகிய நாள்களில் குறித்த விமான சேவை முன்னெடுக்கப்படும் என ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன் மூலம் லாகூர் செல்ல வாரத்துக்கு 900 பயணிகளுக்கு வாய்ப்பளிக்கப்படுகின்றது என ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தினால் ஏற்கனவே, பாகிஸ்தானின் கராச்சிக்கு வாரந்தோறும் நான்கு விமான சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# கொழும்பில் கார் மீது முறிந்து வீழ்ந்த மரம்



கொழும்பு, கொள்ளுப்பிட்டி டுப்பிளிகேஷன் வீதியில் வர்த்தக அமைச்சுக்கு முன்னால் நேற்று மாலை மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் அந்த வீதியூடான போக்குவரத்துப் பாதிப்படைந்துள்ளது.

காரொன்றின் மீது மரம் முறிந்து விழுந்துள்ளதாக போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

மரம் முறிந்து வீழ்ந்ததில் காரின் பின்பகுதி முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் எவ்வித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பதுளையில் மாடி வீட்டில் கஞ்சா வளர்த்தவர் கைது

பதுளை, தல்தென பகுதியில் வீடொன்றின் மேல் மாடியில் வளர்க்கப்பட்ட 10 அடி மற்றும் 9 அடி உயரம் கொண்ட இரண்டு கஞ்சா செடிகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பதுளை போதைப்பொருள் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தல்தென பகுதியில் வசிக்கும் 36 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பதுளைப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேக நபரின் வீட்டின் இரண்டாவது மாடியின் பின்பகுதியில் இரண்டு தொட்டிகளில் வளர்க்கப்பட்ட இந்த இரண்டு கஞ்சா மரங்களும் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் அவரை பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகப் பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் பொன்விழா நிகழ்வும்












அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் 50 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டமும் பொன் விழா நிகழ்வும் நேற்று முன்தினம் விளையாட்டுத் துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் வெகு விமரிசையாக இடம் பெற்றன.

இதனைச் சிறப்பிக்கும் முகமாக இலங்கை அஞ்சல் திணைக்களத்தினால் 25 ரூபா பெறுமதியான சிறப்பு முகமதிப்பு கொண்ட நினைவு முத்திரை மற்றும் அதன் முதல் நாள் உறை ஆகியன வெளியிட்டு வைக்கப்பட்டன.

வெளியிடப்பட்ட முகமதிப்பு கொண்ட நினைவு முத்திரையையும் அதன் முதல் நாள் உறையையும் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் பெற்றுக் கொண்ட போது எடுக்கப்பட்ட படங்கள்.

## தேர்தலை எதிர்கொள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தேர்தலை முகங்கொடுக்கத் தயாராகின்றது.

அந்தவகையில் தேர்தலுக்கான நகர்வுகளை முன்னெடுக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விசேட குழுவொன்றை நியமித்துள்ளது என்று அக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தேசிய மட்டத்திலான தேர்தல்களில் சுதந்திரக் கட்சி எவ்வாறு செயற்பட வேண்டும், அதற்கு எவ்வாறு தயாராக வேண்டும் என்பன உள்ளிட்ட விடயங்களை இந்தக் குழு தீர்மானிக்கும் என்றும் மைத்திரிபால குறிப்பிட்டார்.

"எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் அதனை எதிர்கொள்வதற்குத் தயாராக வேண்டும். அதற்காகவே இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இன்னும் ஓரிரு நாள்களில் இக்குழு கூடவுள்ளது. அதேவேளை, எதிர்வரும் தேர்தலுக்கான தயார்படுத்தல்களை ஆரம்பித்துள்ளோம்" – என்றும் சு.கவின் தலைவர் மைத்திரிபால மேலும் கூறினார்.


## 30 லட்சம் ரூபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிலையைக் கடத்தி வந்தவர் தப்பி தலைமறைவாகிய நிலையில் தேடப்பட்டு வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் பரிசோதகர் ரி.மேனன் தலைமையிலான மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸாரே சிலையைக் கைப்பற்றினர்.

அந்தச் சிலை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



# பழ.நெடுமாறனை மதுரையில் சந்தித்து உடல் நலம் விசாரித்தார் மு.க.ஸ்டாலின்!



மதுரையில் உடல் நலக்குறைவால் வீட்டில் ஓய்வில் இருக்கும் பழ.நெடுமாறனை முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்தித்து நலம் விசாரித்துள்ளார்.

உலக தமிழர் பேரியக்க தலைவர் பழ.நெடுமாறன், உடல் நலக்குறைவு காரணமாக மதுரை பேங்க் காலனியில் உள்ள தனது வீட்டில் ஓய்வெடுத்து வருகிறார்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, நெடுமாறனை அவரது வீட்டில் சந்தித்து உடல் நலம் குறித்து விசாரித்தார். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தேவர் ஜெயந்தி நிகழ்வில் பங்கேற்பதற்காக மதுரை சென்றிருந்தார்.

அவர் நேற்று கோரிப்பாளையம் தேவர் சிலைக்கு மாலை அணிவித்து விட்டு பசும்பொன் சென்றார். அங்கு முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பசும்பொனில் இருந்து மதுரை விமான நிலையம் சென்று சென்னை செல்வதாக பயண திட்டம் தயாரிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், பசும்பொன் நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்ட மு.க.ஸ்டாலின் மதுரை விமான நிலையம் செல்லாமல் மதுரை பேங்க் காலனி சென்று பழ.நெடுமாறனை சந்தித்து உடல் நலம் விசாரித்தார். அவருடன் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன், தங்கம் தென்னரசு, அன்பில் மகேஸ், மூர்த்தி, பி.டி.ஆர்.பழனிவேல் தியாக ராஜன், ராஜகண்ணப்பன் ஆகியோரும் நலம் விசாரித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பழ.நெடுமாறன் கூறும்போது, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடுமையான பணிச் சுமைகளின் இடையே உடல் நலம் குன்றி இருக்கும் என்னை நேரில் சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்தது என் உள்ளத்தில் நெழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

2002 ஆம் ஆண்டு நான் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடலூர் சிறையில் இருந்த போதுவேறொரு வழக்கில் கைது செய்யப்பட்ட மு.க.ஸ்டாலின் அதே சிறையில் அடைக்கப்பட்டார்.

கடலூர் சிறையில் ஒரே பிளாக்கில் நானும் ஸ்டாலினும் 15 நாட்கள் இருந்தோம். அப்போது மு.க.ஸ்டாலினுடன் நெருங்கி உறவாடி இருக்கிறேன். மு.க.ஸ்டாலின் அரசியலுக்கு அப்பாற்பட்டு பல்வேறு கட்டங்களில் என் மீது அன்பும், மதிப்பும் காட்டி இருக்கிறார்.

இந்தச் சூழலில் மு.க.ஸ்டாலினும், அமைச்சர்களும் என்னை நேரில் சந்தித்தது ஆறுதல் கூறியது என்றும் மறக்க முடியாதவை. மு.க.ஸ்டாலினுக்கு என் நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# கேரளா குண்டு வெடிப்பு சம்பவத்தின் எதிரொலி: தமிழகம் முழுவதும் கண்காணிப்பு பணி தீவிரம்

கேரளாவில் நடைபெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் எதிரொலியாக தமிழகம் முழுவதும் கண்காணிப்பு மற்றும் ரோந்து பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. ரயில், பேருந்து, விமான நிலையங்கள் போலிஸாரின் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

கேரள மாநிலம் எர்ணாகுளம் பகுதியில் கிறிஸ்தவ கூட்ட அரங்கில் நேற்று முன்தினம் காலை அடுத்தடுத்து 3 குண்டுகள் வெடித்தன. இதில் இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில், 52 பேர் காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் தொடர்பாக கேரள மாநில பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

குண்டு வெடிப்பு குறித்து விசாரணை நடத்த தேசிய பாதுகாப்பு படையினரும், என்.ஐ.ஏ. அதிகாரிகளும் கேரளா விரைந்துள்ளனர். ஏனைய மத்திய, மாநில புலனாய்வு குழுவினரும் நேரடி மற்றும் ரகசிய புலனாய்வில் ஈடுபட்டுள்ளனர்.



இது ஒருபுறம் இருக்க கேரள குண்டு வெடிப்பை தொடர்ந்து தமிழகத்திலும் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு பணியை டி.ஜி.பி. சங்கர் ஜிவால் முடுக்கி விட்டுள்ளார்.

குறிப்பாக, கேரளாவை அண்மித்துள்ள தமிழக பகுதிகளான கோவை, தேனி, நீலகிரி, தென்காசி, கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்ட எல்லைகளில் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அங்குள்ள சோதனைச் சாவடிகளில் பொலிஸார் தீவிர தணிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இந்த மாவட்ட வனப்பகுதிகளில் தமிழக பொலிஸாருடன் வனத்துறையினரும் இணைந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். கேரளா மற்றும் ஏனைய மாநிலங்களிலிருந்து தமிழகத்துக்கு சந்தேகப்படும்படியாக யாரேனும் வந்தாலோ, அத்துமீறி நுழைய முற்பட்டாலோ அவர்களை உடனடியாக கைது செய்யவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழகம் முழுவதிலும் உள்ள ரயில், பேருந்து, விமான நிலையங்கள் பொலிஸாரின் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதேவேளை, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், நாகப்பட்டினம், நெல்லை, கன்னியாகுமரி உட்பட தமிழகத்தில் உள்ள 13 கடலோர மாவட்டங்களில் கடலோர பாதுகாப்பு குழும பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், சந்தேகப்படியான நபர்களின் நடமாட்டம் குறித்து அறிந்தால் அது குறித்து பொலிஸாருக்கு உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும் என மீனவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# காசா மருத்துவமனை பகுதிகளில் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்!

## நோயாளிகள் பலர் தவிக்கின்றனர் என ஐ.நா தகவல்



இஸ்ரேல் – ஹமாஸ் போர் உக்கிர மடைந்து வருகிறது. இந்த நிலையில், நூற்றுக்கணக்கான நோயாளிகள் காசாவின் வடக்கில் உள்ள மருத்துவமனைகளில் சிக்கித் தவிக்கின்றனர் என பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் ஹமாஸ் குழுவுக்கும் இடையே ஒக்டோபர் 7 ஆம் திகதி முதல் போர் இடம்பெற்று வருகிறது. கிட்டத்தட்ட மூன்று வாரங்களாகத் தொடர்ந்து நடக்கும் இந்த போரில் அப்பாவி மக்கள் உயிரிழந்து வருகின்றனர்.

நூற்றுக்கணக்கான நோயாளிகள் காசாவின் வடக்கில் உள்ள மருத்துவமனைகளில் சிக்கிக் கொண்டிருக்கின்றனர் என பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேல் இராணுவம், காசாவின் அல்-குத்ஸ் மருத்துவமனைக்கு அருகிலுள்ள பகுதிகளை குண்டுவீசித் தாக்கியுள்ளது. அதோடு அல்-குத்ஸ் மருத்துவமனையை விட்டு வெளியேறவேண்டும் என அந்த மருத்துவமனை ஊழியர்களிடம் கூறப்பட்டுள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், நோயாளிகள் பலர் தீவிர சிகிச்சையில் உள்ளதால், அவர்களை நகர்த்தக் கூட முடியாது சூழல் ஏற்பட்டிருக்கிறது என மருத்துவர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர். இஸ்ரேல் அந்தப் பகுதியில் தொடர்ந்து வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகிறது என பாலஸ்தீன செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

சுமார் 14 ஆயிரம் பொதுமக்கள் மருத்துவமனை மற்றும் அதன் மைதானத்தில் தஞ்சமடைந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. ஆக்கிரமிக்கப்பட்ட வெஸ்ட் பேங்க் பகுதியில் உள்ள யாட்டா நகரின் நுழைவாயிலில் 23 வயது பாலஸ்தீனியர் ஒருவர், இஸ்ரேலியப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனிய சுகாதார அமைச்சகம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், தெற்கு காசா பகுதியில் உள்ள கான் யூனிஸில் நகரத்தில் நேற்று 93 பேர் பலியாகியுள்ளனர். ஒக்டோபர் 7 முதல் காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 8 ஆயிரத்து 306 பேர் கொல்லப்பட்டனர். அதில் 3 ஆயிரத்து 457 குழந்தைகள், 2 ஆயிரத்து 136 பெண்கள் மற்றும் 480 முதியவர்கள் அடங்குகின்றனர்.

மேலும், 21 ஆயிரத்து 48 பேர் காயமடைந்துள்ளனர். 1,050 குழந்தைகள் உட்பட 1,950 பேரை காணவில்லை. தண்ணீர் பற்றாக்குறையால், தண்ணீர் மூலம் பரவும் நோய்கள் மற்றும் தோல் நோய்கள் பரவலாக காணப்படுகிறது. 'எங்கள் மக்கள் மீதான போரை நிறுத்துங்கள்' என்று பாலஸ்தீன பிரதமர் முஹம்மது ஷ்டய்யே தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ஹமாஸ் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலில் 1400 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரேசிலில் விமான விபத்து: 12 பேர் உயிரிழப்பு!



பிரேசிலில் இடம்பெற்ற விமான விபத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரேசிலின் அமேசானாஸ் மாநிலத்தில் உள்ள என்விரா என்ற நகரத்துக்கு பயணித்த சிறிய ரக விமானம் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகி யுள்ளது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விமானம் ரியோபிரான்சிகோ விமான நிலையத்திற்கு அருகில் கட்டுப்பாட்டை இழந்து கீழே விழுந்து நொருங்கியுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவத்தில் ஒரு குழந்தை உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்து குறித்த மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



# நெல் தொகை காணாமல் போனமை; மேலும் இரு அதிகாரிகள் பணிநீக்கம்

குருநாகலிலுள்ள களஞ்சியசாலைகளில் நெல் தொகை காணாமல் போனதை அடுத்து அந்தக் களஞ்சியசாலைகளுக்கு பொறுப்பாக செயற்பட்ட அதிகாரிகள் இருவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இரு அதிகாரிகளும் பொறுப்பாக செயற்பட்ட களஞ்சியசாலைகளில் இருந்து சுமார் 7 லட்சம் கிலோகிராம் நெல் தொகை காணாமல் போயுள்ளது என நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட தெரிவித்துள்ளார்.

பொலிஸில் மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாட்டிற்குஅமையபொல்கஹவலயிலுள்ள நெல் களஞ்சியசாலை இன்று திறக்கப்பட்டு நெல் தொகை பரிசோதிக்கப்படவுள்ளது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் 2 முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட தெரிவித்துள்ளார்.

குருநாகலிலுள்ள களஞ்சியசாலைகளில் நெல் தொகை காணாமல் போனமை தொடர்பான பரிசோதனை அறிக்கை விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் இன்று கையளிக்கப்படவுள்ளது என புத்திக இத்தமல்கொட குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நிக்கவெரட்டிய, மஹவ மற்றும் ஆனமடுவ ஆகிய பிரதேசங்களில் உள்ள நெல் களஞ்சியசாலைகளின் காப்பாளர்கள் நால்வர் கடந்த வாரம் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தனர்.




# துருக்கி - இலங்கை இடையே நேரடி விமான சேவை ஆரம்பம்

துருக்கி மற்றும் இலங்கை இடையிலான நேரடி விமான சேவைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

இதன் முதலாவது சேவையில், துருக்கி விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் 261 பயணிகள் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

கடந்த 10 வருடங்களாக மாலைதீவின் ஊடாகவே கட்டுநாயக்கவிற்கான விமான சேவையை துருக்கி விமான சேவை நிறுவனம் முன்னெடுத்துவந்தது.

துருக்கியின் இஸ்தான்புல் நகரிலிருந்து கட்டுநாயக்கவிற்கான நேரடி விமான பயணத்திற்கு சுமார் 08 மணித்தியாலங்கள் செல்லும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

இந்த நேரடி விமான சேவை, திங்கள், செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் காலை 05.40 க்கு துருக்கியில் இருந்து கட்டுநாயக்க நோக்கி முன்னெடுக்கப்படவுள்ளது.

துருக்கியிலிருந்து வரும் விமானம் மீண்டும் காலை 07.40 க்கு துருக்கி நோக்கி புறப்பட்டுச் செல்லவுள்ளது.

இந்த விமான சேவையின் ஊடாக, துருக்கியில் இருந்து இலங்கைக்கு வருகை தரும் பயணிகளின் எண்ணிக்கை மும்மடங்காக அதிகரிக்கும் என விமான நிலையங்கள், விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.







# கௌரிசங்கரி தவராசாவின் நினைவேந்தல் மட்டுநகரில்

சிரேஷ்ட சட்டத்தரணி அமரர் கௌரி சங்கரி தவராசாவின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பு உதயம் விழ்ப்புலனற்றோர் சங்கத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கான அனுசரணை கௌரி சங்கரி ஞாபகார்த்த அறக்கட்டளையின் ஸ்தாபகர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசாவினால் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் ஆதரவற்றோருக்கான உலருணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன. ஐ.பி.சி தமிழ் நிறுவனர் கந்தையா பாஸ்கரன் நிகழ்வை ஒருங்கிணைப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசாவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களானசீ.யோகேஸ்வரன்,ஸ்ரீநேசன், பா.அரியநேத்திரன், முன்னாள் மட்டு மாநகர மேயர் ஈ.சரவணபவன், தமிழரசுக்கட்சி தேசிய இளைஞரணித் தலைவர் கவிஞர் சேயோன், ஓய்வு பெற்ற அரச சட்டவாதி திரு.ஸ்ரீஸ்கந்தராஜா,சட்டத்தரணி பிருந்தா சந்திரகேஸ், பதிப்பாளர் முஸ்டீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.







# தட்டுப்பாடற்ற மணல் விநியோகத்தை உறுதிப்படுத்த டக்ளஸ் வலியுறுத்தல்

வடக்கு மாகாணத்தின் மணல் அகழ்வு மற்றும் மணல் விநியோகம் தொடர்பான விசேட கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

குறிப்பாக, வடக்கு மாகாணத்தின் கட்டுமாணப் பணிகளுக்கு தேவையான மணல் நியாயமான விலையிலும் தட்டுப்பாடின்றியும் கிடைப்பதை உறுதிப்படுத்துவது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அதனடிப்படையில், வடமாராட்சி கிழக்கு பகுதியில் அடையாளம் காணப்பட்ட மணல் திட்டுக்களில் மணல் அகழ்வினை மேற்கொள்வதில் காணப்படும் நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

குறிப்பாக பெரும்பாலான மணல் திட்டுக்கள் வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் ஆகிய திணைக்களங்களினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளமையினால் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் பிராந்திய அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். நிறைவேற்று நிலை அதிகாரிகளும் சூம் காணொலி ஊடாக கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில், சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கும், மணல் அகழ்வு அனுமதிகள் வழங்கப்பட்டு தட்டுப்பாடின்றி மணல் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அடையாளப்படுத்தப்பட்ட மணல் திட்டுக்களில் மணல் அகழ்வை மேற்கொள்வதற்கான ஒத்துழைப்பை அனைத்து திணைக்களங்களும் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

மேலும், சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுபடுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கையின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் பொலிஸார் மற்றும் அதிகாரிகரகளிடம் கேட்டறிந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உரிய ஆலோசனைகளையும் வழங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது.





# கல்முனையில் கரைவலையில் பெருமளவில் பிடிபடும் கீரி மீன்

## கிலோ நூறு ரூபாவுக்கு விற்பனை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கடந்த ஒருவார காலமாக கல்முனைப் பிரதேசத்தில் கல்முனை, சாய்ந்தமருது மற்றும் காரைதீவுப் பகுதிகளில் கரை வலை இழுப்பின் போது வலையில் அதிகளவில் கீரி மீன் பிடிக்கப்படுவதால் தாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றனர் என மீனவர்கள் தெரிவித்தனர்.

கடந்த வருடங்களைப் போலல்லாது இவ்வருட இறுதிப் பகுதியில் தினசரி அதிகளவில் மீன்கள் பிடிக்கப்படுகின்றமையால் தமது பொருளாதார நிலமையை சற்று சீர் செய்யக்கூடியதாக உள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

இந்த மீன்களைக் கொள்வனவு செய்வதற்காக அம்பாறை மாவட்டத்தின் கடற்கரைப் பிரதேசத்தில் வசிக்காத மக்கள் கடற்கரைப் பிரதேசத்திற்கு வந்து அதிகளவில் மீன்களைக் கொள்வனவு செய்கின்றனர் என மீனவர்கள் தெரிவித்தனர்.

தாராளமாகக் கிடைக்கும் கீரி மீன் கிலோ நூறு ரூபா வரை விலை போகின்றது.

கல்முனை, சாய்ந்தமருது மற்றும் காரைதீவுப் பிரதேசக் கடற்கரையோரம் பாரிய கடலரிப்பிற்கு உள்ளாகியுள்ள போதிலும் கரைவலை மீனவர்கள் மிகவும் உற்சாகமாக தினசரி மீன் பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிடிக்கப்படும் மீன்கள் கொழும்பு, கண்டி. நுவரெலியா மற்றும் குருநாகலை போன்ற இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. மேலதிக மீன்களை கருவாடாக மாற்றும் முயற்சியிலும் பிரதேசவாசிகள் ஈடுபட்டு வருகின்றனர்.



# சிறுவர் துஷ்பிரயோகம் சடுதியாக அதிகரிப்பு!

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் சடுதியாக அதிகரித்துச் செல்கின்றன. இது குறித்து உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பல தரப்பிலிருந்தும் அவசர கோரிக்கைகள் எழுந்துள்ளன.

இவ்வருடம் செப்டெம்பர் மாதத்தில் மாத்திரம் 168 சிறுவர் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் அனைவருமே 16 வயதுக்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பானதகவல்கள்கொழும்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தேசிய சிறுவர் அதிகார சபையின் புள்ளி விவரங்களின் படி 2021 ஆம் ஆண்டு நாட்டில் சிறுவர்களுக்கு எதிராக 11 ஆயிரம் குற்றச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அதேவேளை 2022 ஆம் ஆண்டு பதிவாகியுள்ள மொத்த துஷ்பிரேயோக வழக்குகளில் 41 வீதமானவை சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளாகும்.

இந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் வரையான துஷ்பிரயோக சம்பவங்களைப் பார்க்கும் போது இவ்வருடம் அதிகமான சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்கள் வரை இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் குறித்து புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, சிறுவர் துஷ்பிரயோங்கள் தொடர்பில் அலட்சியப்படுத்தல்கள் தொடர்கின்றன எனச் சுட்டிக்காட்டுகின்றது.

அதன்படி முதல் எட்டு மாதங்களில் சிறுவர்களுக்கு எதிராக 7,523 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்களுக்கு அப்பாற்பட்டு 4,000 முறைப்பாடுகள் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களுடன் தொடர்புடையவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடத்தில் மார்ச் மாதமே அதிக துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அந்த மாதம் 1,176 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இக்காலப்பகுதியில் மிக மோசமான பாலியல் துஷ்பிரயோகங்களாக 273 சம்பவங்கள் பதிவாகியுள்ளமையுடன் சிறுவர்கள் பாலியல் சேஷ்டைகளுக்குட்படுத்திய சம்பவங்கள் 309 பதிவாகியுள்ளன.

சிறுவர்களை மிக மோசமாக தாக்கிய சம்பவங்கள் 1,481 ஆக பதிவாகியுள்ளன. கட்டாய கல்விக்குட்படுத்திய துஷ்பிரயோகங்கள் 1,206 ஆக உள்ளன.

கொழும்பு மாவட்டத்திலேயே சிறுவர்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் அதிகம் பதிவாகியுள்ளன. முதல் எட்டு மாதங்களில் இங்கு 830 சம்பவங்கள் முறைப்பாடுகளாக பதிவாகியுள்ளன.

இந்த முறைப்பாடுகளில் சிறுவர்கள் மீது பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்தவர்களில், ஆசிரியர்கள், உறவினர்கள் மற்றும் இனம் தெரியாதவர்களுடன் பௌத்த பிக்குகளும் அடங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஓட்டோ மீது சூடு!

பியகம – யட்டவத்த வீதி பகுதியில் கட்டளையை மீறிப் பயணித்த ஓட்டோ மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

வீதித்தடையை ஏற்படுத்தி ஓட்டோவை நிறுத்துமாறு பொலிஸார் கட்டளையிட்டுள்ளனர். இருப்பினும், கட்டளையை மீறி பயணித்த ஓட்டோவைத் துரத்திச்சென்ற பொலிஸார், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது அதில் பயணம் செய்த சந்தேகநபர்கள் ஓட்டோவைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோ பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர்களைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 31.10.2023


மேஷம்

இன்றைய நாளை சாதகமாக்கிக் கொள்ள நீங்கள் மிகவும் முயற்சி எடுப்பீர்கள். உங்கள் மனது அமைதியாக இருக்கும். உங்கள் இலக்கில் கவனம் செலுத்த இயலும்.

பணிநிமித்தமான பயணங்கள் ஏற்படும். உங்கள் பொறுப்புகளை முறையாக ஆற்றுவீர்கள்.

நல்ல சுமுகமான உறவுமுறை காணப்படும். உறவுப் பிணைப்பின் மதிப்பை நீங்கள் உணர்வீர்கள்.

குடும்பத்தில் விசேஷங்கள் நடக்க வாய்ப்பு உள்ளது. அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள். அது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

உங்கள் அமைதியான மனநிலை காரணமாக மிகவும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.


ரிஷபம்

ஒரு சாதகமான நாள் உங்கள் முன் இருக்கின்றது. இன்று அமைதியான மனநிலையுடன் காணப்படுவதால் முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள். இன்று மாற்றங்கள் ஏற்படலாம். அது உங்களுக்கு நன்மையை அளிக்கும்.

இன்று பணிச்சுமை உங்களுக்கு மனஅழுத்தத்தை உண்டாக்கும். உங்கள் பணியின் தரம் குறைவாக இருக்கும்.

குடும்பத்தில் நல்லுறவு காணப்படும். குடும்பத்தாருடன் இனிமையாகப் பேசி பழகுவீர்கள்.

பணம் அதிகமாக காணப்படும். பயனுள்ள நோக்கங்களுக்காக பணத்தை செலவுசெய்வீர்கள்.

மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.தியானம் மேற்கொள்வது உங்களுக்கு மிகவும் நல்லது.


மிதுனம்

இன்று சௌகரியங்கள் குறைந்து காணப்படும். இன்று சில பொறுப்புகளை உங்களால் செய்ய முடியாமல் போகலாம்.

நீங்கள் பணியில் பிரகாசிப்பீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உணர்ச்சிவசப்படுவதன் காரணமாக தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கும். எனவே நல்லுறவை தக்க வைக்க கவனமாக இருக்க வேண்டும்.

பணஇழப்பிற்கு வாய்ப்பிருப்பதால் பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனமாக இருங்கள். தொண்டை வலி அல்லது கண்களில் எரிச்சல் ஏற்படலாம்.


கடகம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

உங்கள் பணிகளில் தாமதம் ஏற்படும். பணிகள் சுமுகமாக நடைபெற நீங்கள் மிகுந்த கவனத்துடன் செயல்படவேண்டும்.

குடும்ப வட்டாரத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படும். விருந்தினர்களின் வருகை உற்சாகத்தைத் தரும்.

இன்று பணத்தை சேமிப்பதற்கும் முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கும் உகந்த நாள்.ஸ்திரமான நாளாக அமையும்.

இன்றைய நாள் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும். நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.


சிம்மம்


இன்று அர்ப்பணிப்புடன் செயல்படுவீர்கள் உங்கள் நலன் பெருகும். இன்று பயணங்கள் காணப்படும்.

இன்று பணிச்சூழல் நன்றாக இருக்கும். மேலதிகாரிகள் உங்கள் திறமைகளை மதிப்பிடுவார்கள்.

இன்றைய தினம் காதலுக்கு உகந்த நாள் அல்ல. நீங்கள் மகிழ்ச்சியைத் தேடுவீர்கள்.

இன்று பண இழப்பிற்கு வாய்ப்பு உள்ளது. அதனால் சில ஏமாற்றங்களை சந்திக்க நேரும். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். சளி இருமல் போன்ற உபாதைகளுக்கு ஆளாக நேரலாம்.


கன்னி

இன்று உங்கள் எண்ணங்கள் ஈடேறும். இன்று அதிர்ஷ்டங்களை சந்திப்பீர்கள்.

பணியின் மீதான உங்கள் அர்ப்பணிப்பு காரணமாக உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். உங்களின் சிறந்த பணி காரணமாக பதவி உயர்விற்கான வாய்ப்பு உள்ளது.

பெரியவர்களிடமிருந்து இன்று அறிவுரை ஒன்றை கேட்க நேரும். நல்லுறவிற்கு அது பயனளிக்கும். குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும்.

இன்று நிதி வளர்ச்சி அபாரமாக இருக்கும். ஆன்மீக நோக்கங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள். ஆரோக்கியம் மிகச் சிறப்பாக இருக்கும்.


துலாம்

இன்று உங்கள் செயல்களில் கவனம் தேவை.

உங்கள் சகபணியாளர்கள் மற்றும் கீழ்பணிபுரிபவர்களின் ஆதரவு உங்களுக்கு நம்பிக்கை அளிக்கும் மற்றும் நற்பெயர் கிடைக்கும்.

குடும்ப அங்கத்தினர்களிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும். மோதல்களுக்கு வாய்ப்பு உள்ளது.

பணத்தை கையாள்வதில் கவனம் தேவை. அலட்சியமாக இருந்தால் பணஇழப்பு ஏற்படும்.

ஆரோக்கியம் குறைந்து காணப்படும். உங்கள் உணவில் கவனம் செலுத்துங்கள். குளிர்ச்சியான உணவுகளை தவிர்த்துவிடுங்கள்.


விருச்சிகம்

இன்றையநாள் சமநிலையுடன் காணப்படும். உங்கள் அணுகுமுறை மூலம் நீங்கள் புதிய தொடர்புகளை பெறுவீர்கள்.

இன்றை பணியின் மூலம் நீங்கள் நற்பலன்களைப் பெறுவீர்கள். இது உங்கள் தகுதியை நிரூபித்துக் காட்டும்.

உறவில் அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படும். நண்பர்கள் உங்களுக்கு நல்லாதரவு தருவார்கள்.

இன்று நிதிவளர்ச்சி நன்றாக இருக்கும். உங்கள் நண்பர்களின் பிறந்த நாள் போன்ற விசேஷங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திருப்தியாகவும் சந்தோஷமாகவும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 31.10.2023




இன்றைய நாளில் எதிர்பாராத மாற்றங்கள நிகழும். முயற்சிகளை சார்ந்து செயல்படுவது நல்லது.

பணியிடத்தில் நற்பெயரைப்பெறு வீர்கள். விரும்பி பணியாற்றுவீர்கள்.

குடும்பத்தாருடன் நல்லுறவு பரா மரிப்பதற்கு உகந்த நாள். காதல் ஜோடிகள் இன்று பரஸ்பர ஒற்றுமையுடன் இருப்பார்கள்.

எதிர்பாராத வகையில் பணவரவு காணப்படும். பூர்வீ கச் சொத்து, காப்பீடு அல்லது லாட்டரி மூலம் பணம் கிடைக்கலாம்.

இன்றைய நாள் நல்ல ஆரோக்கியத்தை நீங்கள் அனுபவிப்பதற்கு உதவியாக இருக்கும். நீங்கள் கவனிக்க வேண்டிய ஒரே விஷயம்– நீங்கள் உண்ணும் உணவு முறைகள்




திறமையான முறையில் செயலாற்ற உங்களுக்கு பொறுமையும் உறுதியும் தேவை.

பணி செய்வதற்கான திறமை உங்களிடம் காணப்படும் போதிலும் சிறந்த திட்டமிடல் இல்லாத காரணத் தால் அதனை நீங்கள் வெளிப்படுத்த இயலாது. எனவே கவனமாக பணியாற்ற வேண்டும்.

குடும்பத்துடன் அனுசரித்துச் செல்ல வேண்டியது அவசியம்.குடும்பத்தின் அமைதி சூழலை கெடுக்கும் வகையில் வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் குடும்ப உறுப்பினர்களின் உடல் நலத்திற்காக பணத்தை செலவு செய்ய நேரலாம்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உடல் நலத் தில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.




இன்று அன்பும் ஆர்வமும் நிறைந் திருக்கும். நல்ல பாடல்களைக் கேட்டு மகிழுங்கள். விளையாட்டில் நேரத்தை கழியுங்கள்.

பணியிடச் சூழல் சுமுகமாக இருக் காது. அனுசரித்து நடந்து கொண்டால் உங்கள் பணி கள் பாதிக்காது.

காதலுக்கு உகந்த நாள்.காதல் ஜோடிகள் உறவில் ஒற்றுமை கண்டு மகிழ்வார்கள்.

நிதி விஷயங்களில் வளர்ச்சி காணப்படும்.பங்குச் சந்தையில் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் நல்ல லாபம் பெறுவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். ஆரோக் கியக் குறைபாடுகள் காணப்படாது.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். சுய வளர்ச்சிக்காக தொடர்ந்து முயன்றால் இன்று வெற்றி கரமான நாளாக ஆக்கலாம்.

பணியில் பலன்கள் கலந்து காணப்படும். ஏற்ற இறக்கங்கள் காணப்படும். மேலதிகாரிகள் மற்றும் சகபணியாளர்களுடன் உறவாடும் பொழுது கவனமுடன் இருக்க வேண்டும்.

குழந்தைகளின் முன்னேற்றமும் வளர்ச்சியும் உங்க ளுக்கு மகிழ்ச்சி அளிக்கும். உடன்பிறந்தோரின் ஆதரவு கிடைப்பதற்கு சாத்தியம் உள்ளது.

இன்று நிதிவளர்ச்சிக்கு உகந்த நாள். இன்று நிதி சம்பந்தமாக முக்கியமான முடிவுகளை எடுப்பது பயனுள்ள தாக இருக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தின் காரணமாக மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.









# இலங்கை பரிதாபம்!

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியடைந்தது. இதனால், அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டம் ஒன்றில் இலங்கை – ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் முதலில் இலங்கை அணி துடுப்பெடுத்தாடியது. அதன்படி தொடக்க வீரர்களாக பதும் நிசங்கவும் கருணரத்னவும் களமிறங்கினர்.

கருணரத்ன 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் நிசங்க – குசல் மெண்டிஸ் ஜோடி, 2ஆவது விக்கெட்டுக்காக நிதானமாக விளையாடி 62 ஓட்டங்களைச் சேர்த்தது.

நிசங்க 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து குசல் மெண்டிஸ் (39), சமரவிக்ரம (36), அசலங்க (22), டி சில்வா (14), தீக்ஷன (39) ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில் இலங்கை 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 241 ஓட்டங்களைச் சேர்த்தது.

ஆப்கானிஸ்தான் சார்பாக பந்து வீச்சில், பரூக்கி அதிகபட்சமாக 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பின்னர் 242 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் அணி களமிறங்கியது.

ஆட்டத்தை ஆரம்பிக்கக் களமிறங்கிய குர்பாஸ் (0) வந்த வேகத்திலேயே ‘பெவிலியன்’ திரும்ப, அடுத்து வந்த வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதன்படி இப்ராகிம் ஷர்டான் 39 ஓட்டங்களையும் ரஹ்மத் ஷா 62 ஓட்டங்களையும் சேர்த்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஹஸ்மத்துல்லா ஷாகிடி 58 ஓட்டங்களையும் ஓமர்சாய் 73 ஓட்டங்களையும் சேர்த்து கடைசி



வரை ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றனர்.

முடிவில் ஆப்கானிஸ்தான் அணி 45.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரமே இழந்து 242 ஓட்டங்கள் சேர்த்து, 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில் மதுஷங்க 2 விக்கெட்டுகளையும், ரஜிதா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்த போட்டியின் ஆட்டநாயகனாக ஆப்கானிஸ்தானின் பரூக்கீ தெரிவானார்.

இந்தப் போட்டியில் தோற்றதன் மூலம் இலங்கை அணியின் அரையிறுதி வாய்ப்பு கேள்விக்குறியாகியுள்ளது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பாகிஸ்தான் – பங்களாதேஷ் அணிகள் மோதவுள்ளன.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| நிலை | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 6 | 6 | 0 | 0 | 0 | 12 | 1.405 |
| 02 | தென்னாபிரிக்கா | 6 | 5 | 1 | 0 | 0 | 10 | 2.032 |
| 03 | நியூஸிலாந்து | 6 | 4 | 2 | 0 | 0 | 8 | 1.232 |
| 04 | அவுஸ்திரேலியா | 6 | 4 | 2 | 0 | 0 | 8 | 0.970 |
| 05 | ஆப்கானிஸ்தான் | 6 | 3 | 3 | 0 | 0 | 6 | -0.718 |
| 06 | இலங்கை | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | -0.275 |
| 07 | பாகிஸ்தான் | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | -0.387 |
| 08 | நெதர்லாந்து | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | -1.277 |
| 09 | பங்களாதேஷ் | 6 | 1 | 5 | 0 | 0 | 2 | -1.338 |
| 10 | இங்கிலாந்து | 6 | 1 | 5 | 0 | 0 | 2 | -1.652 |




# பேர்ஸி அங்கிள் காலமானார்

இலங்கைக் கிரிக்கெட்டின் தீவிர ரசிகரும் ஆதரவாளருமான பேர்ஸி அங்கிள் காலமானார்.

பெர்சி அங்கிள் என அழைக்கப்படும் பெர்சி அபேசேகர இறக்கும்போது அவருக்கு வயது 87 ஆகும்.

பல ஆண்டுகளாக இலங்கைக் கிரிக்கெட்டிலிருந்து பிரியாத தீவிர ரசிகராக வலம் வந்துகொண்டிருந்த இவர், அண்மைக்காலமாக சுகயீனமுற்றிருந்தார்.

இந்நிலையில் அவர் நேற்று காலமானார்.

இலங்கை அணி பங்கேற்கும் போட்டிகளைத் தவறவிடாது, மைதானப் பகுதிக்கு இலங்கைக் கொடியுடன் சென்று இலங்கை அணிக்கு உற்சாக மூட்டும் வகையில் இவர் நடந்துகொள்வார்.

1996ஆம் ஆண்டு இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வென்றபோது, இவர் மைதானத்துக்குள் இலங்கைக் கொடியுடன் நடமாடியதை மறக்க முடியாது.

இவரை இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள், ரசிகர்கள் கடந்து வெளிநாட்டுக் கிரிக்கெட் வீரர்கள் மற்றும் ரசிகர்களுக்கும் இவரைப் பிடித்திருந்தது

இவரது மறையிட்டுஇலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்களான குமார் சங்கக்கார, சனத்ஜெயசூர்ய மற்றும் இந்திய வீரர் இர்பான் பதான் உள்ளிட்ட பலர் தமது ஞாபகங்களுடன் இரங்கல்களைத் தெரிவித்து எக்ஸ் தளத்தில் பதிவுகளை இட்டுள்ளனர்.

